# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 113/மா/2025**

**நாள்: 30.06.2026**

மு. ரவிசங்கர்
சென்னை–600 028 --- முறையீட்டு மனுதாரர்

உதவி விளையாட்டு அலுவலர்
(அரங்கத் துறை)
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 028, மந்தைவெளிபாக்கம், பாரதி நகர், கதவு எண் 23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மு. ரவிசங்கர் என்பவரின் 14.02.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.02.2025 அன்று பெறப்பட்டு 113/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 028, மந்தைவெளிபாக்கம், பாரதி நகர், கதவு எண் 23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மு. ரவிசங்கர் என்பவர் தனது 14.02.2025 நாளிட்ட மனுவில் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் மண்டல ஆணையருக்கு முகவரியிட்ட 28.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம் 9, வார்டு 126, பகுதி 25, சென்னை மாநகராட்சி (அல்போன்சா) விளையாட்டு திடல் மைதானத்தில் தற்போது வளர்ச்சி திட்ட மூலம் பல கட்டிடங்கள் எழுப்பி வந்ததால் விளையாட்டு மைதானம் கூனி குறுகி குருமா முனிவர் போல் தோன்றுகிறது.

இதனால் பள்ளி, கல்லூரி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், நடை பயிற்சிக்கு செல்லும் விரும்பும் முதியோர்கள் மாற்றுத் திறனாளி நபர்கள் (Divyangjan) கர்ப்பிணி பெண்கள், இன்னும் பல மக்கள் மிகவும், அவதிக்குள்ளாகி மன உளைச்சலுக்கு தள்ளப்படுகிறார்கள்.

சமீப காலமாக பள்ளி, கல்லூரி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், ஆர்வம் மிகுந்த வாலிபர்கள் கால்பந்து, கிரிக்கெட் விளையாடுவதற்கும் சென்னை மாநகராட்சி பகுதியில் போதுமான நிலம்/விளையாட்டு மைதானம் இல்லாததால், தனி நபரின் இடத்தில் வாடகை எடுத்து விளையாடி வருகிறார்கள் என்பதை அறிந்து தொடர்ந்து மிகவும் வேதனை அடைகிறேன்.

எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னை மாநகராட்சி முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்கள் உதவி மண்டல ஆணையர் அவர்கள் நேரடி கள ஆய்வு மேற்கொண்டு தணிக்கை அறிக்கை மூலம் உடனடியாக மீண்டும் சட்டமன்ற

உறுப்பினர் மாமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வளர்ச்சி திட்ட மூலமாக ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் தொடராமல் இருக்க பணிவுடன் வேண்டுகிறேன்.

மனிதன் பூமியில் பிறக்கும்பொழுது ஆரம்ப கட்டத்தில் மருத்துவமனையில் ஒரு கடன் பிறகு பள்ளியில் சேர்ப்பதற்கு ஒரு கடன், படிப்பு முடித்த பிறகு கல்லூரியில் சேர்ப்பதற்கும் பள்ளி மாணவர்களுக்கு கட்டணம் செலுத்துவதற்கும் கடன் பிறகு திருமணம் செய்வதற்கும் கடன் அதன் பின்பு வீடு கட்டுவதற்கும் கடன் மனிதனின் ஆயுள் காலம் முடியும் பொழுது இடுகாடு செல்லும் பொழுதும் ஈமசடங்கு செய்ய கடன் இதன் மத்தியில் வாலிப வயதில் விளையாட்டு ஆர்வம் மட்டுமே அழியாத நினைவுகள் என்பது உறுதி.

விளையாட்டு வீரர்கள் அவர்களது பெற்றோர்களிடம் கடன்களை வாங்கி தனி நபர்களின் நிலத்தில் ஒரு மணி நேரத்துக்கு அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி மன உளைச்சலுடன் விளையாடுகிறார்கள் என்பது உண்மை.

தமிழ்நாட்டை வல்லரசு நாடாகவும் சிறப்புமிக்க விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மற்றும் அரசு சார்பு செயலாளர் விளையாட்டு பிரிவு தலைமைச் செயலகம், சென்னை 9 ஆகியோர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

எனவே, சென்னை மாநகராட்சி தமிழக முதல்வர் அவர்கள் பள்ளி மாணவர்கள் விளையாட்டு வீரர்களை உருவாக்க விளையாட்டு மைதானங்களை சுருக்க வேண்டாம் என்பது என்னுடைய வலுவான புகார் மற்றும் கோரிக்கையை தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன் நடவடிக்கை தேவை.

தமிழகத்தில் விளையாட்டு வீரர்களை உருவாக்குவோம், சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 200 வார்டுகளில் விளையாட்டு மைதானங்களை பெரிதாக்குவோம்!”

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 08.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் (Parks, Play fields and CRRT) மற்றும் மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் தனது 23.06.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 25 வார்டு 126க்கு அமைந்துள்ள சென்னை மாநகராட்சி (அல்போன்சா) விளையாட்டு திடல் கூணி சுருங்கும் விளையாட்டு பெயரில் ஆக்கிரமிப்பு தடுக்க என்று முறையிட்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9 பகுதி 25 வார்டு 126க்கு உட்பட்ட தெற்கு கெனால் பேங்க் சாலையில் அமைந்துள்ள அல்போன்சா என்ற விளையாட்டு திடல் சுமார் 10000 ச.மீ அளவில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் தற்போது நடைமுறையில் உள்ளது. இதில் உடற்பயிற்சி கூடம் கழிப்பறை, திறந்த வெளி அரங்கம், இறகு பந்து, மேசை பந்தாட்டம் ஆகிய விளையாட்டு அமைப்புகளுடன் திறந்தவெளி விளையாட்டு மைதானமாக சிறந்த முறையில் பயன்பாட்டில் உள்ளது. விளையாட்டு வீரர்களின் வெவ்வேறு விதமான விளையாட்டுகள் விளையாட விருப்பம் தெரிவித்ததால், அவர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்று அவர்களின் தேவை அடிப்படையில் மைதானத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மைதானம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

மேலும் மைதானத்தின் அளவு எவ்விடத்திலும் குறைக்கப்படாமல் பொது மக்களின் கோரிக்கை ஏற்று அவர்களின் தேவை அடிப்படையில் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

மனுதாரர் புகார் அளிக்கப்பட்டதும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்பதனை மாண்புமிகு தீர்ப்பாயம் பார்வைக்கு சமர்க்கப்படுகிறது.''

4. பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளரிடமிருந்து அறிக்கை பெறாததால், 06.11.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி விளையாட்டு அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளதால், மனுதாரரின் மனு மீது விரிவான அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ கடித நாள் 27.02.2026–ல் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி விளையாட்டு அலுவலரை கோரப்பட்டது.

5. இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, அரங்கத்துறை, உதவி விளையாட்டு அலுவலர் தனது 13.3.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில்:–

(1) மண்டலம் 9, பகுதி 25, கோட்டம் 126ல் உள்ள சென்னை மாநகராட்சி அல்போன்சா விளையாட்டு மைதானத்தில் வளர்ச்சி திட்ட மூலம் எந்த பணியும் நடைபெறவில்லை. ஏற்கனவே உள்ள உள்விளையாட்டு திடல்கள் மட்டும் புதுப்பிக்கும் பணிகள் மட்டுமே நடைபெற்று வந்தது.

(2) பள்ளி, கல்லூரி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் நடை பயிற்சிக்கு செல்ல விரும்பும் முதியோர்கள் மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள், இன்னும் பல மக்கள் எந்த ஒரு தடையும்யின்றி பயன் பெற்று வருகிறார்கள்.

(3) பள்ளி கல்லூரி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், ஆர்வம் மிகுந்த வாலிபர்கள் கால் பந்து கிரிக்கெட் விளையாடுவதற்கும் சென்னை மாநகராட்சி பகுதியில் போதுமான நிலம் விளையாட்டு மைதானமாக உள்ளது இதை அனைத்து பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

(4) தனி நபரின் விருப்பத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பு ஏற்காது.

(5) பெருநகர சென்னை மாநகராட்சி அல்போன்சா விளையாட்டுத்திடலில் ஏற்கனவே உள்ள உள் விளையாட்டு இறகுபந்து அரங்கம், உள் விளையாட்டு டேபிள் டென்னிஸ் அரங்கம் கலை அரங்கம் மட்டுமே உள்ளது. இனிவரும் காலங்களில் வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெறும் காலத்தில் நேரடி கள ஆய்வு செய்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் துறைக்கு திரு. மு. ரவிசங்கர் அவர்கள் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கோப்புகள் தங்கள் பார்வைக்கு அ.து. ந.க. எண் அ1/1683/2025 நாள் 19.12.2025 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், எங்கள் துறையில் ஏற்பட்ட நிர்வாக தவறினால் விளக்க கடிதத்திற்கு பதிலாக திருவாளர் மு. ரவிசங்கர் அவர்களுக்கு அளித்த பதிலினை தங்களது துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தவறுதலாக நடந்த சம்பவமே ஐயா அவர்கள் இம்முறை தயவுகூர்ந்து மன்னிப்பு அளிக்கும்படியும் இனிவரும் காலங்களில் இது மாதிரியான தவறுதல் நடைப்பெறாது என்ற வாக்குறுதியும் அளிக்கிறேன்.

மேலும், மண்டலம் 9, பகுதி 25, கோட்டம் 126ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அல்போன்சா விளையாட்டு மைதானத்தில் பராமரிப்பு பணிகளை தவிர வேறு எந்த மாதிரியான பணிகளும் நடைபெறாது என்றும் தனிநபர்கள் விளையாட்டு பயிற்சிகள் பொதுமக்களுக்கு எந்தவிதமான தடையுமின்றி துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஒப்புதலுடன் நடைபெறும் என்பதனையும் முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

6. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 22.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 24.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. மனுதாரர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம் 9, வார்டு 126, பகுதி 25, சென்னை மாநகராட்சி (அல்போன்சா) விளையாட்டு திடல் மைதானத்தில் தற்போது வளர்ச்சி திட்ட மூலம் பல கட்டிடங்கள் எழுப்பி வந்ததால் விளையாட்டு மைதானம் குறுகிவிட்டது.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசியல்வாதிகள் தங்களது நிகழ்ச்சிகளுக்காக விளையாட்டு போட்டிகள், மேற்கண்ட விளையாட்டு திடலில் நடத்துவதால் பள்ளி மாணவர்கள் விடுமுறை நாட்களில் விளையாட்டு திடலினை பயன்படுத்த முடியாமல் அவதிபடுகிறார்கள். இவர்கள் நடத்தும் விளையாட்டு போட்டிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் எவ்வித அனுமதி பெறாமல் Fencing அமைக்கிறார்கள். இதனால் விளையாட்டு திடலின் பரப்பளவு சுருங்கிவிடுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான விளையாட்டு திடல்களில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விளையாட அனுமதி மறுக்கப்படுகிறது.

மேற்கண்ட விளையாட்டு திடலில் சிமெண்டினால் ஆன கிரிகெட்டிற்கான பிட்சு அமைக்க கூடாது.

சமீப காலமாக பள்ளி, கல்லூரி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், ஆர்வம் மிகுந்த வாலிபர்கள் கால்பந்து, கிரிக்கெட் விளையாடுவதற்கும் சென்னை மாநகராட்சி பகுதியில் போதுமான நிலம்/விளையாட்டு மைதானம் இல்லாததால், தனி நபரின் இடத்தில் வாடகை எடுத்து விளையாடி வருகிறார்கள் என்பதை அறிந்து தொடர்ந்து மிகவும் வேதனை அடைகிறேன்.

எனவே, மேற்கண்ட அனைத்து திடல்களில் அரசியல்வாதிகள் தங்களது விளையாட்டு நிகழ்ச்சிகளை சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்த தடை விதிக்க வேண்டும். மேலும், ஒப்பந்ததாரர்கள் அனுமதியின்றி அமைக்கும் Fencing தடை செய்ய வேண்டும். சிமெண்டினால் ஆன கிரிகெட்டிற்கான பிட்சு–ஐ அகற்ற வேண்டும்.

எனவே, மேற்கண்ட கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி அரங்கத் துறையின் உதவி விளையாட்டு அலுவலர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9 பகுதி 25 வார்டு 126க்கு உட்பட்ட தெற்கு கெனால் பேங்க் சாலையில் அமைந்துள்ள அல்போன்சா என்ற விளையாட்டு திடல் சுமார் 10000 ச.மீ அளவில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் தற்போது நடைமுறையில் உள்ளது.

இதில் உடற்பயிற்சி கூடம் கழிப்பறை, திறந்த வெளி அரங்கம், இறகு பந்து, மேசை பந்தாட்டம் ஆகிய விளையாட்டு அமைப்புகளுடன் திறந்தவெளி விளையாட்டு மைதானமாக சிறந்த முறையில் பயன்பாட்டில் உள்ளது.

மேற்கண்ட விளையாட்டு திடலில் எவ்வித நிரந்தர கட்டிடம் கட்டப்படவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சியால் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சில சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொதுமக்களுக்கு மேற்கண்ட விளையாட்டு மைதானம் அனுமதி அளிக்கப்படவில்லை. தற்போது மனுதாரர் கோரிக்கை ஏற்று எல்லா சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கண்ட விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த பொதுமக்கள் குறிப்பாக பள்ளி மாணவர்கள் உட்பட எல்லோருக்கும் அனுமதி அளிக்கப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களின் நலன் கருதி விளையாட்டு மைதானத்தை மழைகாலங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்கவும் மேலும் சில மேம்படுத்தும் பணிகள் செய்யும் போது சிலர் இதற்கு எதிராக மனு அளிப்பதால் மேற்கண்ட பூங்காவில் மேம்படுத்தும் பணி செய்ய இயலாமல் உள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மைதானத்தின் அளவு எவ்விடத்திலும் குறைக்கப்படாமல் பொது மக்களின் கோரிக்கை ஏற்று அவர்களின் தேவை அடிப்படையில் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மண்டலம் 9, பகுதி 25, கோட்டம் 126ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அல்போன்சா விளையாட்டு மைதானத்தில் பராமரிப்பு பணிகளை தவிர வேறு எந்த மாதிரியான பணிகளும் நடைபெறாது என்றும் தனிநபர்கள் விளையாட்டு பயிற்சிகள் பொதுமக்களுக்கு எந்தவிதமான தடையுமின்றி துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஒப்புதலுடன் நடைப்பெறும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

9. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சி அரங்கத் துறையின் உதவி விளையாட்டு அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம் 9, வார்டு 126, பகுதி 25, சென்னை மாநகராட்சி (அல்போன்சா) விளையாட்டு திடலில் பல கட்டிடங்கள் கட்டப்பட்டதால், விளையாட்டு மைதானம் குறுகிவிட்டது என்பதும், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசியல்வாதிகள் தங்களது நிகழ்ச்சிகளுக்காக விளையாட்டு போட்டிகள் நடத்துவதால் பள்ளி மாணவர்கள் விடுமுறை நாட்களில் விளையாட்டு திடலினை பயன்படுத்த முடியவில்லை என்பதும், இவர்கள் நடத்தும் விளையாட்டு போட்டிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் எவ்வித அனுமதி பெறாமல் Fencing அமைப்பதால், விளையாட்டு திடலின் பரப்பளவு சுருங்கிவிடுகிறது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான விளையாட்டு திடல்களில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விளையாட அனுமதி மறுக்கப்படுகிறது என்பதும்,

மேற்கண்ட விளையாட்டு திடலில் சிமெண்டினால் ஆன கிரிகெட்டிற்கான பிட்சு அமைக்க கூடாது என்பதும், சமீப காலமாக பள்ளி, கல்லூரி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், ஆர்வம் மிகுந்த வாலிபர்கள் விளையாட்டு மைதானம் இல்லாததால், தனி நபரின் இடத்தில் வாடகை எடுத்து விளையாடி வருகிறார்கள் என்பதும், மேற்கண்ட அனைத்து திடல்களில் அரசியல்வாதிகள் தங்களது விளையாட்டு நிகழ்ச்சிகளை சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்த தடை விதிக்குமாறும், ஒப்பந்ததாரர்கள் அனுமதியின்றி அமைக்கும் Fencing தடை செய்யுமாறும், சிமெண்டினால் ஆன கிரிகெட்டிற்கான பிட்சு–ஐ அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9 பகுதி 25 வார்டு 126க்கு உட்பட்ட தெற்கு கெனால் பேங்க் சாலையில் அமைந்துள்ள அல்போன்சா என்ற விளையாட்டு திடல் சுமார் 10000 ச.மீ அளவில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் தற்போது நடைமுறையில் உள்ளது என்பதும், இதில் உடற்பயிற்சி கூடம், கழிப்பறை, திறந்த வெளி அரங்கம், இறகு பந்து, மேசை பந்தாட்டம் ஆகிய விளையாட்டு அமைப்புகளுடன் திறந்தவெளி விளையாட்டு மைதானமாக சிறந்த முறையில் பயன்பாட்டில் உள்ளது என்பதும், மேற்கண்ட விளையாட்டு திடலில் எவ்வித நிரந்தர கட்டிடம் கட்டப்படவில்லை என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சியால் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சில சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொதுமக்களுக்கு மேற்கண்ட விளையாட்டு மைதானத்தில் அனுமதி அளிக்கப்படவில்லை என்பதும், தற்போது மனுதாரர் கோரிக்கை ஏற்று எல்லா சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கண்ட விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த எல்லோருக்கும் அனுமதி அளிக்கப்படும் என்பதும், பொதுமக்களின் நலன் கருதி விளையாட்டு மைதானத்தில் மேம்படுத்தும் பணிகள் செய்யும் போது சிலர் இதற்கு எதிராக மனு அளிப்பதால் மேற்கண்ட பூங்காவில் மேம்படுத்தும் பணி செய்ய இயலாமல் உள்ளது என்பதும், மண்டலம் 9, பகுதி 25, கோட்டம் 126ல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அல்போன்சா விளையாட்டு மைதானத்தில் பராமரிப்பு பணிகளை தவிர வேறு எந்த மாதிரியான பணிகளும் நடைபெறாது என்றும் தனிநபர்கள் விளையாட்டு பயிற்சிகள் பொதுமக்களுக்கு எந்தவிதமான தடையுமின்றி துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஒப்புதலுடன் நடைப்பெறும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சி உதவி விளையாட்டு அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9 பகுதி 25 வார்டு 126க்கு உட்பட்ட தெற்கு கெனால் பேங்க் சாலையில் அமைந்துள்ள அல்போன்சா என்ற விளையாட்டு மைதானத்தில் பராமரிப்பு பணிகளை தவிர வேறு எந்த மாதிரியான பணிகளும் நடைபெறாது என்றும் தனிநபர்கள் விளையாட்டு பயிற்சிகள் பொதுமக்களுக்கு எந்தவிதமான தடையுமின்றி துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் ஒப்புதலுடன் நடைப்பெறும் என்றும், மேற்கண்ட விளையாட்டு திடலில் எவ்வித நிரந்தர கட்டிடம் கட்டப்படவில்லை என்றும், பெருநகர சென்னை மாநகராட்சியால் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சில சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொதுமக்களுக்கு மேற்கண்ட விளையாட்டு மைதானத்தில் அனுமதி அளிக்கப்படவில்லை என்றும், தற்போது மனுதாரர் கோரிக்கை ஏற்று எல்லா சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கண்ட விளையாட்டு மைதானத்தை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்த அனுமதி அளிக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி உதவி விளையாட்டு அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்து இருந்த போதிலும், மேற்கண்ட விளையாட்டு மைதானத்தை துணை ஆணையர் நிலையில் உள்ள அலுவலர் மூலம் கள ஆய்வு செய்து, விளையாட்டு மைதானத்தின் பரப்பளவு சரியான அளவில் பராமரிக்கப்படுவதையும், ஆக்கிரமிப்பு

ஏதுமில்லை என்பதனையும், விளையாட்டு வீரர்கள், பள்ளி மாணாக்கர் மற்றும் பொது மக்கள் அரசு விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் பயன்படுத்தும் வகையில் செயல்படுவதை உறுதி செய்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. மு. ரவிசங்கர்,
கதவு எண் 23, பாரதி நகர்,
மந்தைவெளிபாக்கம்,
சென்னை–600 028.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) உதவி விளையாட்டு அலுவலர்,
(அரங்கத் துறை),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(4) மண்டல அலுவலர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, 4வது குறுக்கு தெரு, லேக்வியூ ரோடு,
நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

2/7/26
செயலாளர்.

2/7/26